மாநில திட்ட இயக்ககம், சென்னை-06

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

அனுப்புநர்

மாநில திட்ட இயக்குநர்,
மாநில திட்ட இயக்ககம்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
டி.பி.ஜ. வளாகம்,
சென்னை – 06.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க. எண்.449/C7/ஒபக/பமேகு/நாள். 06.04.2022

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு சார்ந்த வழிகாட்டுதல்களில் திருத்தங்கள் - சார்பு.

பார்வை: இவ்வியக்கக செயல்முறைகள் கடித. எண். 449/C7/ஒபக/பமேகு/ நாள்.16.03.2022

.......

பார்வையில் காணும் 16.03.2022 செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கீழ்க்கண்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருத்தம்**

**<u>பெற்றோர் உறுப்பினர்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தில் மாற்றம்:</u>**

**தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவம் (Proportional Representation):**

பள்ளிகளில் இறுதிவகுப்பு – தொடக்கப்பள்ளிகளில் 5-ம் வகுப்பு, நடுநிலைப்பள்ளிகளில் 8-ம் வகுப்பு, உயர்நிலைப்பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை பள்ளி மேலாண்மைக் குழுவில் உறுப்பினராக தெரிவு செய்வதை தவிர்க்கவேண்டும். ஏனெனில் இத்தகைய பெற்றோர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவில் தெரிவு செய்யப்பட்டால் பள்ளி மேலாண்மைக் குழுவில் அதன் ஆயுட்காலமான இரண்டு ஆண்டுகள் அவர்கள் முழுமையாக பணியாற்ற இயலாது. இத்தகைய பெற்றோர்கள் பள்ளியின் வளர்ச்சிக்கு தங்களின் பங்களிப்பை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் என்ற நிலையை தவிர்த்து மற்ற நிலைகளில் அளிக்கலாம்.

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 15 பெற்றோர் உறுப்பினர்களில் கீழ்க்கண்ட மாற்றங்களுடன் விகிதாரச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | பள்ளி | மாணவர்கள் பயிலும் வகுப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டிய பெற்றோர்கள் | | சுய உதவிக்குழு பெற்றோர் உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | வகுப்பு | உறுப்பினர் எண்ணிக்கை** | | |
| 1 | அரசு தொடக்கப் பள்ளி | | | | |
| | 1 முதல் 5 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-4 | 14 | 1 | 15 |
| 2 | அரசு நடுநிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 8 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 8 | 1 | 15 |
| | | 6-7 | 6 | | |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 6 | 1 | 15 |
| | | 6-8 | 4 | | |
| | | 9 | 4 | | |
| | 6 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 6-8 | 7 | 1 | 15 |
| | | 9 | 7 | | |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 3 | 1 | 15 |
| | | 6-8 | 3 | | |
| | | 9-10 | 4 | | |
| | | 11 | 4 | | |
| | 6 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 6-8 | 5 | 1 | 15 |
| | | 9-10 | 5 | | |
| | | 11 | 4 | | |

மேற்கண்ட திருத்தங்கள் பின்பற்றி பள்ளி மேலாண்மைக்குழுக்களை மறுகட்டமைப்பு செய்யப்பட வேண்டும்.

மாநில திட்ட இயக்குநர்